சைதை மேற்கு பகுதி 139 வது அ வட்டச்செயலாளர்.சை.மு.சேகர் இல்ல விழாவில் மாவட்ட செயலாளர். அமைச்சர் .மா.சுப்பிரமணியன். துணை மேயர், மு.மகேஷ்குமார்.எஸ். அரவிந்த் ரமேஷ்,எம். எல். ஏ, ஏ.எம்.வி.பிரபாகரர்ராஜா. எம். எல். ஏ,ஜெ. கருணாநிதி.எம்.எல். ஏ, க.தனசேகரன். . பாலவாக்கம்.சோமு, பாலவாக்கம். விசுவநாதன், பாலவாக்கம். மு.மனோகரன், வேளச்சேரி.எஸ்.பாஸ்கர், வாசுகி பாண்டியன், பகுதிச் செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ் மற்றும் வழக்கறிஞர்.எம். ஸ்ரீதரன்.எம்.சி. சைதை.மா.அன்பரசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் . எம். எஸ். ஹரிபாபு. களக்காடி. எல்லப்பன், டி.என்.சிவமணி,இ.வரதன்,மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ்,சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன் மற்றும் பலர் வாழ்த்தினர்.

தமிழ்நாடு உயர்நிலை – மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம் நேற்று (6 – 7 –2025) பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை அவரது இல்லத்தில் தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் சங்கத் தலைவர் ஆ.மலைக்கொழுந்தன் தலைமையில் நேரில் சந்தித்து பள்ளிக்கல்வித்துறையில் பணி நிரவல் சார்ந்து விருப்பப்பட்டவர்கள் மட்டும் தேவையான பணியிடத்தை தேர்வு செய்து கொள்ளலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க உத்தரவு பிறப்பித்ததற்கு நன்றி தெரிவித்தனர்.

சென்னையில் - இன்று 6 வார்டுகளில் விண்ணப்பங்கள் வழங்கல்!

தன்னார்வலர்கள் வீடு வீடாகச் சென்று வழங்குகின்றனர்!

சென்னை, ஜூலை 7 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி வைக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியில் 15.7.2025 அன்று

6 வார்டுகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி நடைபெறவுள்ளது. இதனையொட்டி இன்று (07.07.2025) இந்த 6 வார்டுகளிலும் தன்னார்வலர்கள் வாயிலாக வீடு வீடாகச் சென்று விண்ணப்பங்கள் வழங்கும் பணி தொடங்குகிறது.

முதலமைச்சர் அவர்கள் 15.07.2025 அன்று "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக நடத்தப்படும் முகாமினை, கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்க உள்ளார். இந்தத் திட்டம் ஜூலை 15 முதல் நவம்பர் மாதம் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியில் 15.7.2025 அன்று மாதவரம் மண்டலத்தில் வார்டு 25, தண்டையார்பேட்டை மண்டலத்தில் வார்டு 38, திரு.வி.க நகர் மண்டலத்தில் வார்டு 76, தேனாம்பேட்டை மண்டலத்தில் வார்டு 109, வளசரவாக்கம் மண்டலத்தில் வார்டு 143 அடையாறு மண்டலத்தில் வார்டு 168 ஆகிய 6 வார்டுகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி நடைபெறவுள்ளது. இதனையொட்டி இன்று (07.07.2025) 6 வார்டுகளிலும் தன்னார்வலர்கள் வாயிலாக வீடு வீடாகச் சென்று விண்ணப்பங்கள் வழங்கும் பணி தொடங்குகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள 200 வார்டுகளில் நாள்தோறும் சராசரியாக 6 வார்டுகளில் முகாம்கள் நடைபெறவுள்ளது.

மண்டலம் 1 முதல் 15 வரை 200 வார்டுகள் உள்ளன. இதில் ஒவ்வொரு வார்டிலும் தலா இரண்டு முறை முகாம்கள் என 400 முகாம்கள் 15.07.2025 அன்று முதல் 31.10.2025 வரை நடைபெறவுள்ளது. முகாம்கள் குறித்த விவரங்களையும், விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் களையும் சுமார் 2000 தன்னார் வலர்கள் மக்களிடம் தெரிவித்து வழங்கும் பணியினை மேற் கொள்வார்கள்.

முதற்கட்டமாக 15.07.2025 முதல் 14.08.2025 வரை காலை 09.00 முதல் மாலை 03.00 மணி வரை பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 1 முதல் 15 வரைலுள்ள 200 வார்டுகளில் திட்டமிடப்பட்ட 109 வார்டுகளில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 109 வார்டுகளில் நடைபெறவுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்கள் குறித்த விவரங்களை ஒவ்வொரு முகாமும் திட்டமிட்டபடி நடைபெறவுள்ள 7 தினங்களுக்கு முன்பாக தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று மக்களிடம் தகவல் தெரிவித்து விண்ணப்பப் படிவங்கள் வழங்கும் பணி இன்று (07.07.2025) முதல் தொடங்கி நடைபெறும்.

இதில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள் மற்றும் 13 அரசுத்துறைகள் மூலம் வழங்கப்படவுள்ள 43 சேவைகள் குறித்த முழு விவரங்கள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு விவரித்து பயன்களுக்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து பொதுமக்கள் பயன் பெறும் அனைத்து விவரங்களும் தெரிவிக்கப்படும்.

இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று நேரடியாகச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.

இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

இந்தப் பணி மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக நடைபெறும். "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் முகாம் நடைபெறும் வார்டில் உள்ள பொது மக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அ.சாந்தகுமார் தலைமை! ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. -கலாநிதி வீராசாமி எம்.பி.-ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. -எஸ்.ஜோயல் பங்கேற்பு !

இராயபுரம் மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டம் !

கரூர் முரளி-குமரி பிரபாகரன்-மு.மு.முஸ்தாக் சிறப்புரை ! ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. – வ.பெ.சுரேஷ் முன்னிலை!

சென்னை ஜூலை: 7

சென்னை வடக்கு மாவட்டம்,இராயபுரம் மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞரின் செம்மொழி நாள் மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் நாளை 8.7. 2025 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி அளவில் தாள முத்து நடராஜன் மன்றம் அருகில் இராயபுரத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு இராயபுரம் மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் அ. சாந்தகுமார் தலைமை வகிக்கிறார்.

ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ,மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ்,இரா. செந்தில்குமார், லயோலா கே.மதன், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ்,எஸ். திருஞானம், மலையம்மாள்,இ. மதன்,எஸ். புகழேந்தி, இரா.பாலன்,எம். ரவி, கொரியர் முருகன், பாலாலட்சுமணன், ஜெ.கௌரீ ஸ்வரன், இரா.பொன்முடி,எஸ். யுவராஜ்,என்.குமார், எம். பாலாஜி, ஜெய்சங்கர்,முகமது மொய்தீன்,அன்வர், பாலசுப்ரமணியன், எஸ்.ரமேஷ், ரெயின்போ விஜயகுமார், சலாவுதீன்,பொன் லட்சுமி,அப்துல் மாலிக் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கோட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் கரூர் முரளி,குமரி பிரபாகரன்,மு.மு.முஸ்தாக், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, கலாநிதி வீராசாமி எம்.பி,ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் தா.இளைய அருணா,ந. மனோகரன்,பி.டி. பாண்டிச்செல்வம், இரா.வெற்றிவீரன், எஸ்.ஆர். கமலக்கண்ணன்,மு. கோபி,க.நாகம்மை, வி.தயாளன்,கி. ராஜேந்திரன், நா. சண்முகம், வண்ணை புகாரி,வே.சிவகுமார், கீதா சுரேஷ் எம்.சி, விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி, பா. வேளாங்கண்ணி எம்.சி. உள்ளிட்ட மாநில,மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் பங்கேற்கின்றனர்.

இராயபுரம் மேற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கா. சீனிவாசன்,வ. மொய்தீன்,கு. கௌரிநாதன்,பி. விஷால் ஆனந்த்,அ. சந்துரு ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் தி.நகர் எஸ். மோகன் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் மாநகராட்சி மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு – வட்ட கழக செயலாளர் எஸ்.தமிழ் செல்வன் ஆகியோரின் முன்னிலையில் நேற்று காலை, ஓரணியில் தமிழ்நாடு என்ற இயக்கத்தை வலுப்படுத்த, சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி, 10வது வார்டு சன்னதி தெரு பாகம் என் 217ல், பாக முகவர் BLA2 தயாளன் / BDA ஜெகன் ஆகியோருடன் கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து, உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளும் பணியில் இடுபட்டனர். இதில் குறிஞ்சி எஸ் கணேசன், எம். வி. குமார், குமரேசன், சீனிவாசன், ராஜேஷ், விக்னேஷ், புவனேஷ், சிவரஞ்சனி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதியில் அ.தி.மு.க., புரட்சி பாரதம் கட்சிகளிலிருந்து விலகி பகுதி செயலாளர் தா.ஜெயக்குமார் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது கழக நிர்வாகிகளுடன் பலர் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்குப் பகுதியில்

அ.தி.மு.க. - புரட்சி பாரதம் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

பகுதி செயலாளர் தா.ஜெயக்குமார் முன்னிலையில்!

காஞ்சிபுரம், ஜூலை 7 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ,தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்கு பகுதி ,அனகாபுத்தூர் 3 வது வட்டத்துக்கு உட்பட்ட அ.தி.மு.க.வைசார்ந்த ஆர். ஆட்டோ முருகேசன்,பி. கணேஷ், பி.எஸ்.. பாஸ்கர், மற்றும் எம்.சுரேஷ், ஏ.பாலாஜி , .சாய்வீரா , அஜய்குமார் மற்றும் புரட்சி பாரதம் கட்சியை சார்ந்த பி. அன்பு தலைமையில் பி.சண்முகம் எம்.நாகூர் மீரான், எஸ்.அஜித்குமார், ஆர். ஜெயராஜ், எஸ்.நாகராஜ், வெங்கடேசன், எஸ். மகேஷ், எஸ். தேவா எஸ். ஜெகன் எஸ்.சக்தி கோடீஸ்வரன் ஜே.தாமு இ.சத்தியா, நந்தகோபால் பி.பூபதி, யுவராஜ்எம். மதன் எம்.முருகன் இ.தினேஷ் கே.சுகுமார் எஸ்.குமார் ஆர்.ரஞ்சித் எஸ்.சையத் அலி, கோகுல், கே. ராகுல் கே.கதிரேசன், இ. நீலகண்டன், எம்.சீனு பி.பிரபு எம்.முருகன் உள்ளிட்ட 35 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி தங்களை பம்மல் வடக்கு பகுதி கழக செயலாளர் த.ஜெயக்குமார் முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்

நிகழ்ச்சியில் மாவட்ட கழகப் பிரதிநிதி எஸ்.கே. நெப்போலியன், வட்டக் கழக செயலாளர் கே. மோகன் பகுதிகழக துணை செயலாளர் க.ஜெயசீலன், தொமுச பேரவை செயலாளர் க.ரவி, தாம்பரம் மாநகர அமைப்பாளர் எம்.டி. விஜயகுமார், டி. கோபால் ஆர்.கே.நரசிம்மன், கே. எஸ். பாபு, சேகர், சோமு, விநாயகம், பம்மல் வடக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஞா. பிரபு, வீரபத்திரன், வீரராகவன், சுதாகர், எஸ்.ஜெயக்குமார், மு.சுதாகர், மோ.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.4 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 7-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெற்றிலையூரணி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர்

மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெற்றிலையூரணி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (06.07.2025) காலை சுமார் 8.45 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சிவகாசி வட்டம், திருத்தங்கல், பனையடிபட்டி தெருவைச் சேர்ந்த பாலகுருசாமி (வயது 50) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிவகாசி வட்டம், தாயில்பட்டி, லட்சுமி நகரைச் சேர்ந்த கண்ணன் (வயது 50) மற்றும் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை வரும் சாத்தூர் வட்டம், படந்தால், நடுத்தெருவைச் சேர்ந்த ராஜபாண்டி (வயது 37), சிவகாசி வட்டம், தாயில்பட்டி, பசும்பொன் நகரைச் சேர்ந்த ராஜசேகர் (வயது 29), ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த கமலேஷ் ராம் (வயது 28) மற்றும் ரமேஷ் (வயது 20) ஆகிய ஐந்து நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமனுக்கு "அரசு மரியாதை"!

கவிஞர்கள் உலகிற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அளித்த கௌரவம்!

சென்னை, ஜூலை 7-

கவிஞர் ரவிபாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

எழுத்தாலும் பேச்சாலும் ஆட்சி மாற்றத்தையே நிகழ்த்திவிடலாம் என்பதை தமிழகத்தில் நிகழ்த்திக் காட்டிய பெருமைக்குரியவர்கள் அறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுமே.

ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த உடனேயே, உலகத் தமிழ் மாநாட்டை சென்னையில் நடத்திக் காட்டி., மெரினா கடற்கரையில் தமிழ்வளர்த்த அறிஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் சிலை வைத்து அழகு பார்த்தவர் தான் பேரறிஞர் அண்ணா.

அண்ணாவின் அடியொற்றியே, எழுத்தாளர்களை கவிஞர்களை ஏற்றிப் போற்றிய பெருமைக்குரியவர் கலைஞர் அவர்கள். செம்மொழி மாநாட்டினையே உலகமே வியக்கும் வண்ணம் கோவையிலே நடத்திக் காட்டி., தமிழன்னைக்கும், தமிழறிஞர்களுக்கும் சிறப்புச் சேர்த்த பெருமை கலைஞருக்கே உரியது.

கலைஞர்களை, எழுத்தாளர்களை கைதூக்கி விடுவதில் கலைஞருக்கு நிகர் கலைஞரே... இன்று நமது மதிப்பிற்குரிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும், கலைஞர் வழியில் பயணித்து, எழுத்தாளர்களுக்கும். கவிஞர்களுக்கும் ஏற்றம் கொடுத்து அவர்களை கௌரவித்து வருகிறார்...

அந்த வகையில், வாழ்நாள் முழுவதும் தமிழுக்கே தன்னை ஒப்படைத்துக் கொண்டு வாழ்ந்து மறைந்திட்ட பெருங்கவிக்கோ மறைவுச் செய்தி கேட்டு, துடிதுடித்து விரைந்து சென்று முதல் ஆளாக அஞ்சலி செலுத்தியவர்தான் நமது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

கவிஞர் ரவிபாரதி அறிக்கை!

அதுமட்டுமின்றி பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என்று அறிவித்து படர்ந்திருந்த சோகத்திலும் நற்செய்தி நல்கி கவிஞர்கள் உலகிற்கே பெருமை சேர்த்துள்ளார்...

வாழுசே குடும்பத்திற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த கவிஞர்களுக்கும் இந்த திராவிட மாடல் அரசு எப்போதும் துணைநிற்கும் என்பதை இவ்வறிவிப்பின் மூலம் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார் மேன்மைக்குரிய நமது முதல் அவர்கள்.

உலக முழுதும் ஒய்வின்றி சுற்றி சுற்றி வந்து ஓயாது தமிழ்ப் பணி ஆற்றிய ஒப்பரிய கவிஞர் பெருந்தகை பெருங்கவிக்கோவுக்கு அளிக்கும் கௌரவமாக மட்டுமே இதை நினைக்காமல், ஒட்டுமொத்த கவிஞர்கள் உலகிற்கே கிடைத்திட்ட மாபெரும் மரியாதை என்பதை எண்ணி கவிஞர் உலகமே இறும்பூது எய்துகிறது...

எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் ஏந்திப் பிடிக்கும் எமது முதல்வர் அவர்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.... கவிஞர்கள் உலகிற்கு கைகொடுக்க ஒருவர் இருக்கிறார் அவர்தான் நமது மு.க. ஸ்டாலின் அவர்கள் என்ற நம்பிக்கை நெஞ்சிலே நிரம்பி வழிகிறது. தமிழ்ப்பணி ஆற்றுவோர் யாராக இருப்பினும் அவர்களைத் தாங்கிப் பிடிக்கின்ற அருங்குணம் வாய்க்கப்பெற்றவர்தான் நமது பெருங்கவிக்கோ.

நான்கு நாட்களுக்கு முன்பு தான் நான் தயாரித்துள்ள காமராஜர் நூல் வெளியீட்டுவிழாவிற்கு அழைப்பிதழைக் கொடுப்பதற்காக திராவிடக் கழகத் தலைவர் கி. வீரமணி ஐயாவைச் சந்திப்பதற்காக நான் சென்றபோது, என்னுடனே வருகை தந்து எனக்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் துணை நின்று தோள் கொடுத்தவர் பெருங்கவிக்கோ என்பதை பெருமையுடன் இவ்வேளையில் குறிப்பிட விரும்புகிறேன். தமிழையும், தமிழறிஞர்களையும் எப்போதும் உயர்த்திப் பிடிப்பவர்கள், உயர்ந்து கொண்டே இருப்பார்கள் என்பதற்கு நமது முதல்வர் அவர்கள் சரியான சான்றாகத் திகழ்ந்து வருகிறார் என்பதை பெருமையுடன் நன்றியோடு குறிப்பிட்டு ஒட்டுமொத்த கவிஞர்கள் உலகின் பாராட்டுகளையும் உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கவிஞர் இரவி பாரதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தல் பணி ஒவ்வொரு பாகத்திலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ ஒவ்வொரு பகுதியாக சென்று பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை பார்வையிட்டார்/ அதன் தொடர்ச்சியாக செம்பாக்கம் வடக்கு பகுதி 36வது வார்டில் ஒரு பாகத்தில் பாக முகவர் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் தேர்தல் பணி குழு உறுப்பினர்கள் ஆகியோர்களுடன் இணைந்து இல்லங்கள் தோறும் சென்று உறுப்பினர் சேர்க்கும் பணியை மேற்கொண்டார் அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் மாமன்ற உறுப்பினர் சரஸ்வதி சந்திரசேகர் வட்டக் கழகச் செயலாளர் ஜே. வி. சந்திரசேகர் வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம் ஆலோசனைப்படி மாதவரம் பகுதி 32 30 'அ' சார்பில் மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம் தலைமையில் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற இயக்கப் பணியை தொடங்கிட உறுப்பினர் சேர்க்கை படிவம் மற்றும் வாக்காளர் பட்டியலை B.D.A .B.L.2 ஆகியோரிடம் வழங்கினார்.உடன் வட்ட செயலாளர் எம் சரவணன்,பகுதி அவை தலைவர் புத்தகரம் இ.ஏழுமலை,வட்ட செயலாளர் டி.சுந்தரம்,சிவில் எம் செல்வம்,கௌதம்,பாலாஜி,ஆர் தேவன்,எஸ் ஹேமாவதி,எம் சேகர் ,சிஎல் உதயகுமார், ஜெ நரசிம்மன், ஹரிபாபு, ஸ்ரீதரன், எஸ் என் கோதண்டன் ,முல்லை ஆறுமுகம், ஆர் சுந்தர்ராஜ் ,ஆர் எஸ் ரவிச்சந்திரன், கேதர்நாத், எஸ். வேலுச்சாமி, ஆர் எஸ் ரவிச்சந்திரன், டைலர் சீனிவாசன், உமா மகேஸ்வரி, சாய்ரா பானு, ஏவி முருகன், அபிப் ரஹ்மான், எஸ்.சூர்யா, எம்..ஸ்ரீதர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்